**செ.வெ.எண்: 92** **நாள்: 31.01.2017**

**புதுக்கோட்டை மாவட்டம்,இலுப்பூர் வட்டம், எண்ணை அரசினர் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் மனித நேயவார நிறைவு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், எண்ணை அரசினர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் மனித நேயவார நிறைவு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 30.01.2017 அன்று நடைபெற்றது.

இந்த மனித நேய வார நிறைவு விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 முதல் 30 வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனித நேய வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள எண்ணை அரசினர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியில் மனித நேய வார நிறைவு விழா துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், விழாவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, நடனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் மற்றும் பள்ளிக் கல்வுாரி மாணவிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடையும் வேற்றுமைகளை மறந்து மனிதனை ஒவ்வொரு மனிதனும் மதிக்க கற்றுக்கொள்ளும் வகையில் மனிதநேய வாரவிழா நடத்தப்படுகிறது. இதன் மூலம் அனைவரும் மனித நேயத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. அதனடிப்படையில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள், பாடக் குறிப்பேடுகள், சீருடைகள், காலணிகள், கணித வரைபட கருவிகள் மற்றும் மேல்நிலை கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டிகள் மற்றும் புதிய ஆதிதிராவிடர் நல விடுதிகள், கல்லுாரி விடுதி மாணவர்களுக்கு இரண்டடுக்கு கட்டில்கள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. எனவே அனைவரும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.இராமசாமி, மாவட்ட ஆதிதிராவடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.க.அன்பழகன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, காவல்த்துறை துணை கண்காணிப்பாளர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு திரு. கே.எஸ்.சுந்தரமூர்த்தி மற்றும் அரசு அலுவலர் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**